மாயன்
பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Annamalai Sathagam Conveys the life beliefs

M. Vadivel[1], supervisor Dr. R. Mallika[2]

Ph.D Scholar (Full-Time)[1], Assistant Professor[2], Department of Tamil, Bharathiar University PG Extension and Research Centre, Perundurai, India

Manuscript ID : **MT217A0129**
Volume : **3**
Issue : **1**
Month : **March**
Year : **2023**
Received: 24.02.2023
Revised: 18.03.2023
Accepted: 23.03.2023
Published: 28.03.2023
Pages : 118-124
DOI: 10.5281/zenodo.7774464

ABSTRACT:

Faith is like a Pillar in every human being. In this way, if you live with sixteen riches, you will attain moksha in life. It is a form of faith. There are foods that well-educated experts dismiss as unhealthy. The reason is that the thought expresses the belief that all these will cause physical harm. If we do sinful activities that are not human life then it will come back to us. It is a unique belief that sins committed unknowingly can be expunged through some remedies. Eat with etiquette while eating. Otherwise the belief that food will be unavailable later is expressed through how to taste the medicinal betel nut. One of the basic needs of man is food, to produce that food it is a belief that better tillage. Also, Annamalai sathagam predicts belief systems such as the fruit of the month of Adi, Which gives superiority, if a person lives by performing good deeds for the body, he can get rid of bondage.

KEYWORDS:

Faith, Discipline, Wealth, Habits, Tillage, Cure of Disease

அண்ணாமலை சதகம் உணர்த்தும் வாழ்வியல் நம்பிக்கைகள்

மு. வடிவேல்[1], நெறியாளர். முனைவர் இரா. மல்லிகா[2],

முனைவர்பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)[1], உதவிப்பேராசிரியர்[2],

தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழக முதுகலை பட்ட மேற்படிப்பு விரிவாக்க மற்றும் ஆராய்ச்சி மையம், பெருந்துறை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

நம்பிக்கை என்பது ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தூண் போன்று அமைகிறது. அவ்வகையில் பதினாறு செல்வங்களைப் பெற்று வாழ்ந்தால் வாழ்வினில் மோட்சம் கிட்டும் என்பது ஒருவகை நம்பிக்கையாகும். நன்கு கற்றறிந்த சான்றோர்கள், உடலுக்கு ஆகாதவை என தகர்த்துவிடும் உணவுப் பொருட்களுமுண்டு. காரணம், இவையெல்லாம் உடல் உபாதைகள் ஏற்படுத்திவிடும் என்ற சிந்தனை நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. மனித வாழ்வியலுக்கு ஆகாத குற்றம் நிறைந்த செயல்களைச் செய்தால் பிறகு நம்மையே வந்துச் சாரும். தான் அறியாமல் செய்யும் பாவங்களைச் சில பரிகாரங்களின் வழியே நிவர்த்தி செய்யலாம் என்பது தனிவகை நம்பிக்கையாகும். உணவு உண்ணும் போது ஆசாரத்துடன் உண்ணவேண்டும் இல்லையெனில் பிற்காலத்தில் உணவு கிடைக்காமல் போய்விடும் என்பது நம்பிக்கை. மருத்துவ குணம் நிறைந்த வெற்றிலையை எவ்வாறு சுவைக்கவேண்டும் என்பதன் வழியே நம்பிக்கை வெளிப்படுகிறது. மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்று உணவு. அவ்வுணவினை விளைவிப்பது உழவு. சிறந்த உழவிற்கு வழிவகை செய்தால் அதிக சாகுபடி செய்யலாம் என்பது ஒருவகை நம்பிக்கையாகும். மேலும், ஆடி மாதத்தில் விளைவிப்பது மேன்மை தரும். மனிதன் உடலுக்கென இன்னின்ன செயல்கள் செய்து வாழ்ந்தால் பிணியிலிருந்து விடுபடலாம் போன்ற நம்பிக்கை முறைகளை அண்ணாமலை சதகம் கணித்துக் காட்டுகிறது.

கருச்சொற்கள்

நம்பிக்கை, ஒழுக்கம், செல்வம், பழக்கவழக்கங்கள், உழவு, நோய் நீங்குதல்

முன்னுரை

சிற்றிலக்கிய வகைகளுள் நூறு பாடல்கள் சேர்ந்த தொகுப்பினைச் சதகம் என்று அழைக்கப்படுகிறது. இச்சதகம் குறுநில மன்னரையோ இறைவனையோ பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பெறுகிறது. இறைவன் பெயர் கொண்ட சதக இலக்கியங்கள் மக்களுக்கு நல்வாழ்வு செழிக்க வழிவகைச் செய்கிறது. அவ்வகை

சதகம் அறங்கள், நம்பிக்கைகள் என்பதன் வழியே மக்களுக்கு போதனைகளை வழங்குகிறது.

பதினாறு பேறுகள்

அன்றைய காலம் தொட்டு இன்று வரை நம் மக்களிடையே "பதினாறு பெற்று பெரு வாழ்வு வாழ்க" என்ற சொல்லாடல் கையாளப்பட்டு வருகிறது. அவ்வகையான பதினாறு செல்வ வளங்களைப் பெற்று வாழ்ந்தால் மக்களின் வாழ்வு மேன்மையடையும் என்ற நம்பிக்கை இன்றளவும் காணப்படுகிறது. இதனை அண்ணாமலை சதகமானது,

"நதிவளந் தருபுவி விளைகின்ற நெல்லாதி
நவதானி யப்பெருமையு.....
அதிவளந் தருமிதைப் பேறுபதி னாறென்ப...."

(அண்ணாமலை சதகம் பா. 33)

என்ற பாடல் வரிகளின் வழியே வளந்தரும் புவி, விளையும் நவதானியம், சொற்படி வாழும் மனைவி, நன்மக்கள், குறைவில்லாதக் கல்வி, ஞான அறிவு, இளமை, அழகு, நோயின்மை, வாழ்நாள், உடல் உறுதி, துணிவு, புகழ், வெற்றி தரும் நல்வினை, அறுசுவை உணவு என பதினாறு பேறுகளாக இச்சதகம் சுட்டுகிறது.

சான்றோர் உண்ணாதவை

ஆசாரத்தில் உயர்ந்த சான்றோர்கள் குறிப்பிட்ட சில பொருட்களை உண்ண முற்படுவதில்லை. அவ்வகையில், பனை வெல்லம், பனங்கிழங்கு, நுங்கு, பனம் பழம், செடிப்பசலை, செம்பசலை, சிறுபசலை, குண்டைச் சுரைக்காய், ஈருள்ளி, மரவள்ளி, வெள்ளுள்ளி, செங்கீரை, செம்முருங்கை, தென்னை வெல்லம், ஈச்ச வெல்லம், காய்ச்சிரக்கு, பால்முள்ளி, பிண்ணாக்கு, தேன், கையால் பிசைந்த தயிர், ஒட்டக நெய், எருமை மற்றும் செம்மறியாட்டு பால், தீட்டு உள்ள வீட்டில் பால் என இவையெல்லாம் சான்றோர்கள் உண்ண விரும்பாத பொருள்களாக அண்ணாமலைச் சதகம் உணர்த்துகிறது. இதனை,

"பனையினது வெல்லங் கிழங்குறுங் கொடுபனம்
பழமிவை யருந்தலாகா
படர்தரு செடிப்பசலை, செம்பசலை, சிறுபசலை
பரியகுண் டைச்சுரைக்காய்..."

(அண்ணாமலை சதகம் பா. 59)

என்ற பாடல் வரிகளின் வழி அறியமுடிகின்றன.

ஐவகைப் பாவங்களைப் போக்குதல்

பாவம் செய்திருப்பின் அதனை சரிசெய்ய பரிகாரம் என்ற முறையை கையாளுவதுண்டு. அவ்வகையில் அண்ணாமலை சதகம் ஐந்து வகையான பாவங்களை வகைப்படுத்தி காட்டுகின்றது. அம்மியில் அரைத்தல், அடுப்பில் விறகிட்டு எரித்தல், தொட்டியிலிருந்து குடத்தில் தண்ணீரை முகந்து கொண்டு வருதல், விளக்கு மாற்றால் பெருக்கிச் சாணியிட்டு மெழுகுதல், அரிவாள்மணையில் காய்களை வெட்டுதல் ஆகிய ஐவகைப் பாவங்களை மறைகளை ஓதி தருப்பனம் செய்து விருந்தினர்களுக்கு உணவிட்டால் பாவம் நீங்கிவிடும் என்ற நம்பிக்கையை இச்சதகம் உணர்த்துகிறது.

உண்பதில் குற்றம்

காலம் காலமாக உணவு உண்ணும்போது சில வழிமுறைகள் கடைப்பிடிப்பதுண்டு. அவை பிறழுமாயின் ஒழுக்கத்திற்கு மாறாக எண்ணப்படுகிறது. உணவினைப் பரிமாறும் அன்னக்கரண்டியில் உணவு உண்ணல், இலையில் இடப்பட்ட காய்கறியை மீண்டும் வேண்டிப் பெற்றுண்ணல், மாலை நேரத்திலும் நடு இரவு நேரத்திலும் தயிர் சோறு உண்ணல், மண்பாத்திரம், தகரம், உடைந்த பாத்திரத்தில் உண்ணல், உள்ளங்கையில் உணவினைப் பெற்று உண்ணல், நின்று கொண்டே உண்ணல் என்பவை உண்பதில் குற்றங்களாக சுட்டப்படுகின்றன. இதனை,

"பந்தியிடை யோதன மிருப்புக் கரண்டியாற்
பரிமாற வுண்ணறோடம்
பாவைய ரிடுங்கறியை மீண்டுகொடு வாவெனப்
பன்னியிட வுண்ணறோடஞ்..."

(அண்ணாமலை சதகம் பா. 62)

என்ற பாடல் வரிகளின் வாயிலாக அறியமுடிகின்றன.

உணவு உண்ணும் முறை

இலைபோட்டு உணவு உண்ணும் இடத்தை சுத்தம் செய்து கிழக்கு முகமாய் பார்த்து அமர்தல் வேண்டும். பரிமாற உணவின் மீது சிறிது நீர் தெளித்து, நெய்யிடப் பட்ட சோற்றை ஐந்து பிடி எடுத்து இலையின் வலதுபுறத்தில் வைத்து மந்திரம் சொல்லவேண்டும். பிறகு, காக்கைக்கு உணவிடவேண்டும். அவ்வாறு உணவு இட்ட பின்பே மனிதனாகிய நாம் உணவினை உண்ண வேண்டும் என்ற நம்பிக்கையை,

“போசனஞ் செயுமிடந் திருமெழுக கிட்டுப்
பொருந்திய கிழக்குமுகமாய்ப்
பொற்பா யிருந்திட்ட வடிசின்மே லுதகம்
புரோட்சித் துடன்வலப்பால்....”

(அண்ணாமலை சதகம் பா. 63)

என்ற வரிகளால் அண்ணாமலை சதகம் உணர்த்துகிறது.

வெற்றிலை உட்கொள்ளும் முறை

நாம் உண்ட உணவு செறிப்பதற்கு வெற்றிலை வாயிலிட்டு சுவைக்கும் பழக்கம் இன்றளவும் காணப்படுகிறது. அவ்வகை வெற்றிலையைக் கையாளும் பொழுது, வெற்றிலைக் காம்பு, பழுத்த வெற்றிலை, ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டிருக்கும் வெற்றிலை, கசங்கிய வெற்றிலை, மிகவும் முற்றிய வெற்றிலை, அழுகிய வெற்றிலை, அழுக்குப் படிந்து கசங்கிய வெற்றிலை, இவ்வகையான வெற்றிலை எல்லாம் நீக்கி வாயில் பாக்கு இட்டு. அப்பாக்கு எச்சிலை மூன்றுமுறை உமிழ்ந்து, நல்ல வெற்றிலையை எடுத்து நரம்பு இல்லாமல் கிழித்து, அதோடு கல் சுண்ணாம்பு, கிராம்பு, ஏலம், தக்கோலம், வால்மிளகு, சுக்கு, சாதிக்காய், சாதிபத்திரி, பச்சைக் கற்புரம் இவற்றை எல்லாம் சேர்த்து வாயில் சுவைத்து நுகர வேண்டும் என்ற நம்பிக்கையை அண்ணாமலை சதகம் வெளிப்படுத்துகிறது. இதனை,

“மெல்லிலைக் காம்பும் பழுப்போடு காம்பதன்
மேற்றொரும் புங்கசங்கள்
மிகமுறுக லழுகலும் வதங்கலிவ் வெட்டாகும்
வெற்றிலை குற்ற நீக்கி....”

(அண்ணாமலை சதகம் பா. 65)

என்ற பாடல் வரிகளின் வழி அறியமுடிகின்றது. அன்றைய காலந்தொட்டு இன்றுவரை இப்படித்தான் வெற்றிலையைச் சுவைத்து நுகரவேண்டும் என்ற நம்பிக்கையை அறியமுடிகிறது.

குற்றம் ஏற்படுத்தும் செயல்கள்

உணவு உண்ணும் போது பிறருடன் பேசுதல், சிரித்தல், சோற்றை உருட்டி உண்ணுதல், மயிர், புழு, நகம் பட்ட சோற்றை உண்ணுதல், நகத்தையும் மயிரையும் கடித்தல், ஒரு காலால் மற்றொரு காலை தேய்த்து நீரால் கழுவிடல், உணவு உண்ணும்

பாத்திரத்தில் எச்சிலை உமிழ்தல், கைகளால் நகத்தை நீக்குதல், கையினால் தலையினைச் சொறிதல், விரலால் தலையைக் கீறிடுதல், பழுதடைந்த வீட்டில் உறங்குதல், பட்டைச் சாராயம், கஞ்சா, கள் குடித்தல், வயதில் முதிர்ந்த பெரியோர்களை பழித்தல், தூக்கத்தில் எழுப்புதல், பெரியவரின் சொல்லினைக் கடந்து நடத்தல் இவை போன்ற செயல்கள் அனைத்தும் வாழ்நாள் முழுவதும் குற்றத்தை ஏற்படுத்துவதாகும். இச்செயல்கள் அனைத்தும் தவிர்த்து வாழ்ந்தால் நற்பேறடையலாம் என்ற நம்பிக்கையை அண்ணாமலை சதகம் வெளிப்படுத்துகிறது.

“தந்தை சொல்மிக்க மந்திரமில்லை” (ஆத்திசூடி)

என்ற வாக்கிற்கிணங்க நடத்தல் வாழ்வினில் நன்மை பயப்பதாகும்.

ஆகாத நிழலும் புழுதியும்

அரசமர நிழலில் நிற்றல், விளாமரத்தின் அடி நிற்றல், விளக்கின் நிழலில் நிற்றல், இரவில் மனிதர் நிழல் நம்மேல் படிதல் போன்ற இடங்களில் எல்லாம் மூதேவி உறைந்திருப்பாள் என்ற நம்பிக்கையை அண்ணாமலை சதகம் வெளிப்படுத்துகிறது. இதனை,

“நாட்டரசு நீழலும் விளாமரத் தடிநிழலு
நன்மனை விளக்குநிழலு
நடமாடு மனிதர்நிழ லிரவினுடன் மேற்படியி
னலமிலாச் சேட்டைமருவும்...”

(அண்ணாமலை சதகம் பா. 68)

என்ற பாடல் வரிகள் வெளிப்படுத்துகிறது. மேலும், வீடு பெருக்கிய விளக்குமாற்றுப் புழுதி, கழுதை நாய்ப் புழுதி, மயிர் உகுத்த புழுதி, சாம்பல் வேகாக்கரி புழுதி, ஆடு செல்லும் போது எழும் புழுதி போன்றவை மனிதர்கள் மீது படிதல் கூடாது என்ற நம்பிக்கையைப் பாடல்வழி அண்ணாமலை சதகம் உணர்த்துகிறது.

உழவுச் சிறப்பு

நல்ல விளைச்சலை பெற்றுத் தரக்கூடிய நிலம், அருகில் தண்ணீர், வீட்டில் பாதுகாவலாக வைத்திருக்கும் விதைகள், கயிலாயமலை போன்ற எருது, கரும்பை போன்ற எருமைக்கிடா, ஏர்க்கலப்பைகள், உண்மையாக உழைக்கும் ஏவலர்கள், நல்ல ஆடுமாடு புழுக்கை, சாணக எரு, தழை எரு, நல்ல நாற்று, நல்ல நடவு, நல்ல களை பறிப்பு, நல்ல வேலி, நல்ல காவல், நாள்தோறும் வயல்களைச் சென்று பார்க்கும்

திறமை இவை அனைத்தும் இருப்பின், நல்ல செல்வ வளம் பெற்று நாடு செழித்து ஓங்கும் என்ற நம்பிக்கையை அண்ணாமலை சதகம் சுட்டுகிறது.

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் உணவும் ஒன்று. நோயின்றி மக்கள் வளம் செழிக்க உழவும் வழிவகைச் செய்கிறது.

ஆடி ஐந்தாம் தேதி பலன்

“ஆடி பட்டம் தேடி விதை” என்ற வாக்கு நம் மக்களின் சொல்லாடலில் காணப்படுகிறது. அதில் ஆடி ஐந்தாம் நாளுக்கு தனிச் சிறப்புண்டு. அவை, ஒவ்வொரு கிழமையும் வேறுபட்டு வரும்போது பலன் கிடைக்கிறது. ஆடி ஐந்தாம் தேதி புதன்கிழமை வருமாயின் ஒரு போகம் மிகவும் வளரும். வியாழக்கிழமை வருமாயின் இருபோகம் மிகவும் வளரும். வெள்ளி வரின் பயிர் சாவியாகும். சனியன்று வரின் பயிர் ஒன்றும் விளையாது. ஞாயிறன்று வரின் பயிர்கள் பாழாகும். திங்களன்று வரின் ஒரு போகம் நல்ல விளைவு, செவ்வாய் வரின் பனிச்சோளமே விளையும் என்ற நம்பிக்கைச் சிந்தனையை,

“ஆடிமா தம்பிறந்த தைந்தாந் தினத்திலே
யரியபுத வாரம்வந்தால்
அவ்வருட மொருபோக மேவிளையு
மவனிமே லிட்டபயிர்கள்...”

(அண்ணாமலை சதகம் பா. 76)

என்ற பாடல் வரிகள் செப்புகின்றன.

நோய்கள் வாரா வகை

எட்டு நாட்களுக்கு இருமுறை தலைக்கு எண்ணெய் தேய்த்து நீராடுதல், 15 நாட்களுக்கு ஒருமுறை கண்ணுக்குக் கலிங்கம் இடுதல், மாதத்திற்கு ஒருமுறை பித்தநீர் வெளியேற மருந்து உண்ணுதல், மூன்று மாதத்திற்கு ஒருமுறை மூக்கில் மருந்திடுதல், ஆறு மாதத்திற்கு ஒருமுறை பேதி மருந்து உட்கொள்ளல், பசி ஏற்பட்ட பின்பே உணவு உண்ணுதல் போன்ற முறைகளைக் கையாளப்பட்டால் நோய்பிணியில் இருந்து விடுபடலாம். இதனை அண்ணாமலை சதகமானது,

**"எட்டுநா ளைக்கிரு முழுக்காடொவ் வோர்பட்ச
மிருகண் கலிக்கமிடுவோர்
எத்தாக மதிதொறும் பித்தநீ ரெல்லா
மெடுத்திட மருந்துகொள்வோர்...."**

(அண்ணாமலை சதகம் பா. 91)

என்ற வரிகளின் வாயிலாக அறியலாம்.

வாரத்திற்கு ஒருமுறை மட்டுமே எண்ணெய் தேய்த்து குளிக்கவேண்டும் என்ற முறையை ஆத்திசூடியில் "சனி நீராடு" என குறிப்பிடப்பட்டுள்ளது.

முடிவுரை

அண்ணாமலை சதகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நம்பிக்கை கூறுகள், காலம் காலமாக மக்களால் கடைப்பிடிக்கப்படுகின்றன. இன்னின்ன செய்தால் நன்மைகள் நிகழும், இன்னின்ன செய்மின் தீமை நிகழும் என்பதை இச்சதகம் வரையறுத்துக் காட்டுகிறது. அன்றைய காலம் தொட்டு இன்றுவரை காலம் வேறுபடினும் நம்பிக்கை என்ற கூறு மக்களிடையே வேரூன்றி காணப்படுகிறது என்பதை இச்சதகம் உறுதி செய்கிறது.

துணைநூற்பட்டியல்

1. த, இராசேசுவரி. *சதகத்திரட்டு*. முதற்பதிப்பு., தொகுதி. 1, சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2001.
2. வளர்மதி. *நீதி நூல்கள்*. ஆறாம் பதிப்பு., கோபாலபுரம், சென்னை, மதி நிலையம், 2010.
3. ச வே, சுப்ரமணியன். *சிற்றிலக்கியக் களஞ்சியம்*. முதற்பதிப்பு., தொகுதி. 1, சதக இலக்கியங்கள், புதுத்தெரு, சிதம்பரம், மெய்யப்பன் பதிப்பகம், 2015.
4. ந வீ, செயராமன். *சிற்றிலக்கியச் செல்வங்கள்*. முதற்பதிப்பு., புதுத்தெரு, சிதம்பரம், மெய்யப்பன் பதிப்பகம், 2016.

REFERENCES

1. T, Rajeshwari. *Sathagathirattu*. 1st ed., vol. 1, Chennai, International Institute of Tamil Studies, 2001.
2. Valarmathi. *Neethi Nulgal*. 6th ed., Gopalapuram, Chennai, Mathi Nilayam, 2010.
3. S V, Subramanian. *Sittrilakkiya Kalanjiyam*. 1st ed., vol. 1, Sathaga ilakkiyangal, Puthu Theru, Chidambaram, Meiyappan Publications, 2015.
4. N V, Jayaraman. *Sittrilaikya Selvangal*. 1st ed., Puthu Theru, Chidambaram, Meiyappan Publications, 2016.